# கள்ளக்குறிச்சி நகராட்சி

## நகர் மன்ற சாதாரணக் கூட்டம்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" குறள்...

**கூட்டம் எண். 08/2023** **நாள். 30.10.2023**

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் எதிர்வரும் 07.11.2023 ஆம் தேதி செவ்வாய்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. அச்சமயம் நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**

## கூட்டபொருள்

**பொருள் எண். 01**

15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2022-2023ன் கீழ் கள்ளக்குறிச்சி நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு தேவையான Tata Ace LCV இரண்டு வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு M/s ASR Body Works, மதுரை என்ற நிறுவனத்திற்கு கொள்முதல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது வாகனம் விநியோகம் செய்வதற்கு தயார் நிலையில் உள்ளது. மேலும் இரண்டு Tata Ace LCV வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் தற்காலிக பதிவு பெறுவதற்கு வாகனம் 1.MAT559033PVF34883, 2. MAT559033PVF34885 ஆகிய இரண்டு வாகனங்களுக்கும் காப்பீடு பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி வாகனகளுக்கு காப்பீடு பதிவு செய்வதற்கு M/s Reliance General Insurance Co Ltd நிறுவனத்திடம் பெறப்பட்டுள்ள மதிப்பீட்டின் படி ரூ.46,048/-க்கு(ரூபாய் நாற்பத்தி ஆறாயிரத்து நாற்பத்தி எட்டு ரூபாய் மட்டும்) செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்தி மேற்படி வாகனகளுக்கு காப்பீடு பதிவு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்படி Tata Ace LCV இரண்டு வாகனகளுக்கு காப்பீடு பதிவு செய்வதற்கு கட்டணத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 753 / 2023 / இ1)

**<u>பொருள் எண். 02</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி வார்டு எண்.10 ல் உள்ள ஸ்ரீ ராஜா ராஜேஸ்வரி நகர் மற்றும் மணிமேகலை நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள சிறுபாலம் மிகவும் சேதமடைந்து பொதுமக்களும், போக்குவரத்துக்கும் பயன்படுத்த மிகவும் சிரமமான நிலையில் உள்ளது. எனவே மேற்படி, சிறுபாலத்தை ஆய்வு செய்ததில் இச்சிறுபாலங்கள் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலங்கள் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள தோராய மதிப்பீடு தொகை ரூ.2,35,000/-(ரூபாய் இரண்டு இலட்சத்து மூற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2672 / 2023 / இ1)**

**<u>பொருள் எண். 03</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் நிதி (சுகாதார மான்யம்) 2023-2024ன் கீழ் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.07-ல் சங்கராபுரம் சாலை பகுதியில் சர்வே எண்.127ல் புதிய நகர்புற சுகாதார மையம் தரை தளம் மற்றும் இரண்டு மேல் தளங்கள் என மூன்று தளங்கள் கொண்ட கட்டட வடிவமைப்பு (Structural design) அறிக்கை செய்து அவற்றின் அறிக்கை வழங்க கோரியதற்கு கட்டணமாக ரூ.76,700/-ஐ செலுத்த வேண்டி அரசு பொறியியல் கல்லூரி, கருப்பூர் சேலம் அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி கட்டணம் செலுத்தி மேற்காணும் கட்டட வடிவமைப்பு (Structural design) அறிக்கை பெறப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்படி கட்டணம் ரூ76,700/-(ரூபாய் ஏழுபத்தி ஆறாயிரத்து ஏழுநூறு மட்டும்)-க்கும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிகலாம்.
2. தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி நகராட்சி நிதியிலிருந்து செலுத்தப்படும் தொகையினை பணிகள் மேற்கொண்டதற்கான வழங்கப்படும் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்து நகராட்சியின் வருவாய் நிதியில் செலுத்தி ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1639 / 2023 / இ1)**

## பொருள் எண். 04

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்17-ல் அண்ணா நகர் பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் தென்கீரனூர் கிராமம் வரை சென்றடையும் வகையில் அமைப்புகள் உள்ளது. தற்பொழுது இக்கால்வாய் முழுவதுமாக பழுதடைந்து மழைநீர் செல்லாமல் பாதைகளில் அங்கங்கே தேங்கி நிற்பதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாலும், சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில்உள்ளதாலும், மேலும் இப்பகுதியில் மழைக்காலங்களில் வடிகால் நிரம்பி இச்சாலை முழுவதும் தண்ணீர் தேங்கி சாலைகள் மிகவும் சேதமைடைகிறது. எனவே மேற்படி இடர்பாடுகளை தவிர்திட சாலைகளின் குறுக்கே சிறுபாலம் அமைத்து மழைநீர் வடிகாலினை புதியதாக அமைத்தால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் உகந்ததாக அமையும். எனவே மேற்படி பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

இப்பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்)-க்கும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2354 / 2023 / இ1)

## பொருள் எண். 05

நகர்மன்ற தீர்மான எண். 143, நாள்:-31.07.2023 ல் நகராட்சி பகுதியில் டெங்கு, கொரோனா தொற்று மற்றும் இதர நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தலா 30 நபர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ரோஜா C.I.G. மகளிர் குழு, கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாக கடந்த 15.07.2023 முதல் 30.09.2023 வரை 30 நபர்கள் மட்டும் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.பிடி1/1896/2023 நாள்:-31.08.2023 ல் நகராட்சி பகுதியில் டெங்கு, கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள 90 நாட்கள் நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.எண்.7549/ஆ4/2023 நாள்.16.08.2023 தெரிவிக்கப்பட்டுள்ளதில் தற்போது நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் துரிதமாக செயல்படுத்த ஒவ்வொரு கொசுப்புழு ஒழிப்பு பணியாளரும் 50 வீடுகள் வீதம் 6 நாட்களுக்கு 300 வீடுகள் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், முதிர்க்கொசுக்களை அழிக்க புகைமருந்து அடிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி பகுதியில் மொத்த குடியிருப்புகள் 15840 ஆகும் (15840/300 = 53 நபர்கள்) பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது.

தற்போது இப்பணிக்கு ஏற்கனவே பணிபுரிந்து வரும் ரோஜா C.I.G மகளிர் குழுவின் மூலமாக தேவைக்கேற்ப நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள எதிர்வரும் 01.10.2023 முதல் 31.12.2023 வரை தேவைக்கேற்ப பணியாளர்களை நிர்ணயம் செய்து பணிகள் மேற்கொள்ளவும், இவர்களுக்கு கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.418/-வீதம் ஊதியம் வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.00 லட்சத்திற்கு மன்றப்பொருள் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசியம் கருதியும் மேற்கண்ட பணிக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஏற்கனவே ரோஜா C.I.G மகளிர் குழுவின் மூலமாக 01.10.2023 முதல் 31.12.2023 வரை தேவைக்கேற்ப நபர்கள் மட்டும் பணியமர்த்தி பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொகையான நாளொன்றுக்கு ரூ.418/–வீதம் ஊதியமாக வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2969 / 2021 / எச்1)

## பொருள் எண். 06

அரசாணை எண் 337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம் ஏ–4) துறை நாள்.16.06.2023 தேதிய அரசாணையில் கோவிட்–2019 முழு ஊரடங்கு காலமான 24.03.2020 முதல் 31.08.2020 மற்றும் கோவிட் இரண்டாம் அலை காலத்தில் 01.05.2021 முதல் 30.06.2021 வரை உள்ள 2 மாதங்களுக்கு முழு ஊரடங்கு அமுல்படுத்திய நிலையில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சி / நகராட்சி மற்றும் பேருராட்சிகளுக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகளுக்கு 01.06.2020முதல் 31.08.2020 வரை 3 மாதங்களும் இரண்டாம் அலை காலமான 01.05.2021 முதல் 30.06.2021 வரை 2 மாதங்கள் என மொத்தம் 5 மாதங்களுக்கு கடைகள் மற்றும் ஆண்டுகுத்தகை இனங்களின் கேட்பு தொகையினை தள்ளுபடி செய்து வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்
2. கோவிட்–2019 காலமான 01.06.2020 முதல் 31.08.2020 வரை 3 மாதங்கள் மற்றும் கோவிட் இரண்டாம் அலை காலமான 01.05.2021 முதல் 30.06.2021 வரை 2 மாதங்கள் என மொத்தம் 5 மாதங்களுக்கு கடைகள் மற்றும் ஆண்டுகுத்தகை இனங்களின் கேட்பு தொகையினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண்.2669/2023/அ2 ))

## பொருள் எண். 07

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் கடிதம் எண்.அ6/21921/2018, நாள்.13.01.2019, 17.01.2019 மற்றும் 17.01.2019 ஆகிய தேதிய கடிதங்களில் தென்னக இரயில்வே துறையின் மூலம் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை புதிய அகல இரயில் பாதை அமைக்கும் பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிக்கு 1.கள்ளக்குறிச்சி வட்டம் கள்ளக்குறிச்சி கிராமம் புல எண்158/5ல் 0.47.5 ஏர்ஸ் வாய்கால் புறம் போக்கு என வகைபாடுள்ள இடம், 2.ஏமப்பேர் கிராமம் புல எண்.21/2ல் உள்ள பாட்டை புறம் போக்கு என வகைபாடுள்ள 0.07.0 ஏர்ஸ் இடம் மற்றும் 3.ஏமப்பேர் கிராமம் புல எண்.70/12ல் உள்ள 0.00.05 கிணறு என வகைபாடுள்ள ஆகிய இடங்களில் மேற்படிஅகல இரயில் பாதை அமைக்கும் பணிக்கு நிலத்தை தென்னக இரயில்வே நில உரிமை மாற்றம் செய்ய அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நில உரிமை மாற்றம் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அலுவலகத்திற்கு 03.08.2023ல் ஒருபக்க அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி இடங்கள் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் அல்ல, என்பதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் வருவாய் துறையின் கட்டுபாட்டில் உள்ள இவ்விடங்களில், புதிய அகல இரயில் பாதை அமைக்கும் பணிக்கு நில உரிமை மாற்றம் செய்ய கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என சான்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி புதிய அகல இரயில் பாதை அமைக்கும் பணிக்கு கள்ளக்குறிச்சி வட்டம் கள்ளக்குறிச்சி கிராமம் புல எண்158/5ல் 0.47.5 ஏர்ஸ் வாய்கால் புறம் போக்கு என வகைபாடுள்ள இடம், ஏமப்பேர் கிராமம் புல எண்.21/2ல் உள்ள பாட்டை புறம் போக்கு என வகைபாடுள்ள 0.07.0 ஏர்ஸ் இடம் மற்றும் ஏமப்பேர் கிராமம் புல எண்.70/12ல் உள்ள 0.00.05 கிணறு என வகைபாடுள்ள ஆகிய இடங்கள் நகராட்சிக்கு சொந்தமானது இல்லை என்பதால் நிலத்தை தென்னக இரயில்வே நில உரிமை மாற்றம் செய்ய தடையின்மை சான்று வழங்கலாம், மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர் நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தடையின்மை சான்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2557 / 2023 / எப்1)**

## பொருள் எண். 08

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டு குடிநீர் திட்டத்தில் மூலம் பெறப்பட்டும், உள்ளூர் நீர் ஆதாரமான நகராட்சிக்கு சொந்தமான கிணறுகளிலிருந்தும் பெறப்பட்டும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தினை 15 தினங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்து அதன் விவரத்தினை அம்ரூத்.2.0 இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீரின் தரத்தை ஓராண்டு காலத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திண்டிவனம் ஆய்வகத்தில் ஆய்வு செய்து அறிக்கை பெற ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2535 / 2023 / இ2)**

## பொருள் எண். 09

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் Tata Ace, TN 15 W 0158 என்ற வாகனத்தில் ரேடியேட்டரில் பழுதுகள் ஏற்பட்டு வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் முற்றிலும் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் இதர பழுதுகளை நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி தெருமின் விளக்கு பராமரிப்பு வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.37,000/-க்கு (முற்பத்தி ஏழாயிரம் மட்டும்) பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் Tata Ace TN 15 W 0158 வாகனத்தில் பழுது நீக்க பணிக்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2104 / 2022 / இ2)**

## பொருள் எண். 09

கள்ளக்குறிச்சி நகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரம், நிர்வாக ரீதியாக செய்யப்படும் அறிவிப்புகள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள், தொழில் மலர் விளம்பரங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் சாதனை மலர் விளம்பரம் ஆகியவைகளை பிரசுரம் செய்வதற்கு 2023–2024 ஆம் ஆண்டிற்கு கூடுதல் தோராய செலவினம் ரூ.5,00,000/–(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 701 / 2023 / இ1)

## பொருள் எண். 10

கள்ளக்குறிச்சி நகராட்சியின் அலுவலக பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பணிபுரியும் கடைநிலை பணியாளர்களுக்கு 2023–2024 ஆம் ஆண்டிற்கு வழங்கவேண்டிய சீருடைகள், தையற்கூலி, மிதியடி மற்றும் பெருக்கும் படல்கள் வழங்க வேண்டியுள்ளதால் மேற்படி செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00/– (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.சீருடைகள் அனைத்தும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

3.மிதியடி, பெருக்கும் படல்கள் ஆகியவை விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

4.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2410/2023 / H1)

**நகர் மன்ற தலைவர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**